Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6
வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 5-1-1946 மார்கழிமீ 22உ { மலர் 13

# வீர வாலி

## பெரியார் ஈ. வெ. ரா. விளக்கவுரை

★

சேலம் ஜில்லா எடப்பாடியில் 29-12-45ல் ஜலகண்டபுரம் தோழர் ஜே. பி. கண்ணன் (கிருஷ்ணன்) அவர்களால் சித்தரிக்கப்பட்ட வீரவாலி என்னும் கதை, தோழர் கண்ணன் பிரதான நடிகராக இருந்து பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடித்துக் காண்பிக்கப்பட்டது. நாடகத்திற்கு சுமார் 1000 மக்களுக்கு மேலாகவே வந்திருந்தார்கள். நாடக முடிவில், பெரியார் பாராட்டிப் புகழ்ந்து கூறிவிட்டு நாடகத்தைப்பற்றிப் பேசியதாவது:

### பெரியார் ஈ. வெ. ரா. பேச்சு

"தோழர்களே,

இங்கு நடித்த வீரவாலி கதை நடிப்பைக் கண்டீர்கள். இதைப் பற்றி தலைமை வகித்தவன் என்கின்ற முறையில் ஏதாவது பேச வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

இந்தக்கதை இராமாயணக்கதையில் வரும் ஒரு பாகத்தையொட்டி செய்யப்பட்ட கற்பனைச் சித்திரமாகும். இராமாயணமே ஒரு கற்பனைக் கதை. அதை மதவாதிகள் மதக்கதையாகவும், ஒருவகை ஆஸ்திகர்கள் கடவுள் கதையாகவும் ஆக்கிவிட்டார்கள். அக்கதை இன்று ஆரியர்களாலும் அவர்களது அடிமைகளாலும் மக்களுக்கு மதப் பிரசாரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்த **இராமாயணக்கதைக்கு மூலக்கதை**

---

கறுப்புச்சட்டையில்
பெரியார் ஈ. வெ. ரா.

★

வாணியம்பாடியில் வரவேற்பு



இடமிருந்து, எம். பி. வடிவேல், பெரியார், பழனிமுத்து, ஜி. கோவிந்தாசன் ஆகியோர். 13-12-45.

---

என்று சொல்லப்படும் வால்மீகி ராமாயணக் கதைப்படி சரியாக எவரும் பிரசாரம் செய்வதில்லை, அந்தப்படி நடிப்பதும் இல்லை. ஏனெனில் அதை வால்மீகி ராமாயணப்படி நடித்தால், அது மதப் பிரசாரத்திற்கோ அல்லது கடவுள் பிரசாரத்திற்கோ சிறிதும் பயன்படாது.

**காரணம் என்னவென்றால், அது** ஆதியில் உண்டாக்கியவர் என்று சொல்லப்படும், (உண்மையில் அவரால் எழுதப்பட்டிருக்குமானால்) வால்மீகி முனிவர் என்பவர் அதை ஒரு மதக் கருத்துக்கொண்டோ அல்லது அதில்வரும் "நல்ல" பாத்திரங்கள் என்பவர்களான ராமன் முதலியவர்களை தெய்வங்களாகவோ, தெய்வாம்சங்களாகவோ, ஒழுக்கம் நீதி நாணயம் ஆகிய குணங்கொண்டவர்களாகவோ, அதைப்படிப்பவர்கள் கருதவேண்டுமென்றோ, அக்கருத்துக்களை அப்பாத்திரங்களுக்குள் புகுத்த வேண்டுமென்றோ கருதி சித்தரித்தாரென்று சொல்வதற்கில்லை.

### இராமாயணம் மூலக்கதை அல்ல

இது ஒருபுறமிருக்க மற்றொரு சங்கதி என்னவென்றால், இந்த இராமாயணக்கதை வால்மீகியால் தொடுக்கப்பட்ட ஒரு மூலக்கதை என்றுகூட சொல்வதற்கில்லை, என்பதாகும்.

அதாவது இராமாயணமானது கந்தப்புராணம் என்னும் ஒரு சைவக்கதையைப் பார்த்து வைணவ புராணமாக கற்பிக்கப்பட்டதென்றும், அதுவும் கந்தப்புராணத்தைவிட வெகுகாலத்திற்குப் பிறகு கற்பிக்கப்பட்டதென்றும், சொல்லவேண்டியிருக்கிறது. கந்தப்புராணம் புராணங்களில் சேர்ந்ததாகும். இராமாயணம் இதிகாசங்களில் சேர்ந்ததாகும். புராண காலம் முந்தியதும் இதிகாச காலம் பிந்தியதுமாகும். ஆகவேதான் புராணவகையில்சேர்ந்த கந்தப்புராணம் முந்தியதென்றும், இதிகாச வகையில் சேர்ந்த இராமாயாணம் பிந்தியதென்றும் சொல்லுகிறேன்.

### இரண்டும் ஒன்றே

இதில் இராமாயணம் கந்தபுராணத்தைப்பார்த்து **ஏற்படுத்தப்**

ரோஜா முத்தையா

பட்டது என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், இரண்டு கதையும் ஒரே போக்கு; ஒரே கருத்து, ஒரே தன்மையதாக இருந்து வருகின்றன.

இதுவுங்கூட வைணவ பரமாய் ஏற்படுத்தப்பட்டது என்பது மாத்திரமல்லாமல், வைணவபரத்தில் உள்ள மற்றொரு இதிகாசமாகிய பாரதக் கதையின் ஆபாசத்தை, இழிவை நீக்குவதற்காக, வேறு ஒரு கதை ஏற்படுத்தவேண்டி இருந்ததை அனுசரித்து,பாரதத்தில் உள்ள சில இழிவையும் அசிங்கத்தையும் பெரும் அளவுக்கு நீக்குவதற்கு கற்பிக்கப்பட்டதாகும்.

### இராமாயணம் பாரதத்துக்கு பிந்தியது

ஆதலால் இராமாயணம் கந்தப்புராணத்திற்கு பிந்தியதும் பாரதத்திற்கு பிந்தியதுமாகும்.

கந்தப்புராணத்திலும் பாரதத்திலும் உள்ள சில பகுத்தறிவுக்கு ஒவ்வாத போக்குகள் இராமாயணத்தில் குறைக்கப்பட்டிருக்கின்றன. முந்தியவற்றுள் கந்தப்புராணத்தில் சிவனை முதல் கடவுளாகக் காட்டப்படுவதற்கு தேவர்கள் சிவனிடம் சென்று, அசுரர்களின் கொடுமையைப்பற்றி முறையிட்டு, தங்கள் கஷ்டங்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும், சிவன் சுப்பிரமணியனைப்பெற்றுக் கொடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இராமாயணத்தில் விஷ்ணுவை முதற் கடவுளாகக் காட்டுவதற்குஆக, தேவர்கள் விஷ்ணுவிடம் சென்று தங்களை ராக்ஷதர்கள் கொடுமைப் படுத்துவதாக முறையிட்டு தங்கள் கஷ்டங்களை நீக்க வகைசெய்ய வேண்டுமென்று கேட்டதாகவும், விஷ்ணு தானே அவதாரமெடுத்து வருவதாகக் கூறியதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இரண்டும் ஒன்றேயாகும். சிவன் தனது மகனைக் கொடுத்தார். விஷ்ணு தானேவந்தார். இருவரும் ராக்ஷதர்களையும், அசுரர்களையும் அழிப்பதற்கு வந்தவர்கள். அசுரர், ராக்கதர் என்பவர்கள் ஆரியரல்லாதவர்கள் என்றும், கறுப்பு நிறமுள்ளவர்களைத்தான் அப்படி அழைக்கப்படுகிறது என்றும், சாஸ்திர ஆதாரங்களிலேயே காணப்படுகிறது. இந்தத் தன்மையில் தான் இந்தக் கதைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

### வாலி கதை புதியது

இராமாயணத்தில் வாலியின் பாகம் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறது என்றாலும், அது ஆரியர்களுக்கு ஒரு படிப்பினைக்காக சேர்க்கப்பட்டிருக்கிறது என்றே கருதுகிறேன். அதாவது ஒழுக்கம், நீதி, வீரம், என்பதெல்லாம் தன் காரிய சித்திக்கு சமயம்போல், சவுகரியம்போல் நடந்துகொள்ள வேண்டும் என்ற கொள்கையை புகுத்துவதற்கேயாகும். இது சாதாரணமாக பஞ்ச தந்திரக்கதை கொள்கையைப் பொருத்த ஒழுக்கம், நீதியே யாகும். இந்தக்கதை மதத்திற்கும், தெய்வத் தன்மைக்கும், நீதி தர்மத்திற்கும் பயன்படும்படியாக பிற்காலத்தில் பிரசாரம் செய்யப்பட்டுவிட்டபடியால் அதில்கண்ட விஷயங்களை தந்திரம் என்று சொல்லாமல் அதை தெய்வத்தன்மை,பொது தர்மம்,சாஸ்திர நீதி என்று சொல்லப்படவேண்டியதாக ஆகிவிட்டதுடன், அதற்கேற்ற சில்லரைத் திருத்தங்களும் சில செய்யப்படவேண்டியதாகி விட்டன.

அதோடு மாத்திரமல்லாமல் கதையில் வரும் குற்றமுள்ள பாத்திரங்களை குற்றமற்றவர்களாகவும், குற்றமில்லாதவர்களை கெட்டவர்களாகவும் காட்டப்படவேண்டியதாகவும் ஆகிவிட்டது.

சாதாரணமாக வாலியை மறைந்து நின்று இராமன் கொன்றது என்பது நீதி என்றும், தெய்வத் தன்மை என்றும் ஏன் காட்டப்படவேண்டி வந்ததென்றால் வாலி பலசாலி என்பது ஒன்று, அவன் எதிரில் நின்று எவராலும் போர் செய்யமுடியாத வரப்பிரசாதி என்பது இரண்டு, இப்படிப்பட்ட ஒரு எதிரி ஆரியர்களுக்கு ஏற்பட்டால் என்ன செய்வது என்பதற்கு உதாரணமாகத்தான் "அப்படிப்பட்டவனை அவனுக்குத் தெரியாமல் சூழ்ச்சிசெய்து மறைந்து இருந்து கொல்லவேண்டியது" என்பதை வெற்றி தர்மமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

### விபீஷணன்

விபீஷணன் விஷயமும் இது போலவேதான். அதாவது எதிரி பலவானாய் இருந்தால், அவனை வெல்ல வேண்டுமானால் எதிரிக் கூட்டத்தில் வேற்றுமையையும், சுயநல லாப உணர்ச்சியையும் காட்டி, பிரிவினை உண்டாக்கி, ஒருவனுக்கு உதவிசெய்து சுவாதீனப்படுத்திக்கொண்டு மற்றவனை (எதிரியை) ஒழித்துவிட வேண்டும் என்கின்ற வெற்றி தர்மத்தைக் காட்டவே விபீஷணன் பாகம் சித்தரிக்கப்பட்டதாகும்.

அனுமான் விஷயமாகவும் இதைத்தான் படிப்பினையாகக் காட்டப்பட்டிருக்கிறது. அனுமான் வாலியிடம் அனாமதேய அடிமையாக இருந்திருக்கிறான். சுக்கிரீவனும்கீழ்ப்பட்டவனாகவே இருந்திருக்கிறான். வாலி கிஷ்கிந்தைக்கு அரசனாவான். இருவரும் அவன் (வாலி) இல்லாதபோது நாட்டைத்தங்கள் சுவாதீனம் செய்து கொண்டார்கள். வந்தவுடன் நிலைமை அறிந்து வாலியால் விரட்டி அடிக்கப்பட்டு விட்டார்கள். இராமலட்சுமணன் வந்தவுடன் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வாலியைக் கொல்ல வாக்கு வாங்கிக்கொண்டார்கள். இராமன் வாலியைக்கொன்று வாக்கை நிறைவேற்றி, அவர்களை பயன்படுத்தி தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டான். இது தான் ஆரியரின் வெற்றி தர்மமாக என்றும் இருக்கவேண்டியது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்; இன்று இருந்துவருவதுமாகும்.

### இதன் படிப்பினை

ஆகவே "எவனைக்கொண்டும் என்னசெய்தும் காரியம் சாதித்துக் கொள்ளலாம்" என்பதுதான் இராமாயணத்தின் படிப்பினையாகும். அனுமார், சுக்கிரீவன், விபீஷணன் ஆகிய இவர்கள் ஆழ்வார்களாக ஆக்கப்பட்டதற்கு காரணமும் இதுவேயாகும். "அயோக்கியர்கள்தான் ஆரியர்களால் மதிக்கப் படுவோர்கள்" என்பதற்கு நமக்கு இது ஒரு நல்ல உதாரணமாகும். இதை மெய்பிக்கத்தான் நமக்கு இந்தக்கதை (வீரவாலி என்ற கதையை) நடிக்கப்பட்டது. இதில் நடிகர்கள் வாலியின் உயர்குணத்தையும் பெருந்தன்மையையும்முக்கியப் படுத்திக்காட்டி இருப்பதோடு, சுக்கிரீவன், அனுமான் தன்மையையும் சரிவர வெளிப்படுத்திக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தமாதிரியாக ஆரியக் கதைகளின் உட்கருத்துக்களை நன்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# திராவிடரே உணருங்கள்!

தி. போ. வேதாசலம் பி. ஏ.,

தாய் நாட்டில் மக்கள் ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக அடிமைகளாக வாழும் விந்தை திராவிடநாட்டில்தான்.

உலகத்திலே பழையநாடு—திராவிடம். உலகத்திலே பழைய மக்கள்—திராவிடர். உலகத்திலே பழைய மொழி திராவிட மொழி.

இன்று

1. திராவிடம் இந்தியாவின் ஓர் பாகமாகி அதற்காக ஆண்டுதோறும் பல கோடி ரூபாய்கள் வரியென்ற பெயரால் அபராதம் கொடுத்து வருகின்றது.

2. திராவிடர் வடநாட்டு வங்காளியர், பஞ்சாப் மக்கள், மராட்டியர் யாவராலும் வெறுக்கப்பட்டாலும், அண்ணன் தம்பிகளாக நடத்தப்படாவிட்டாலும், இந்தியரென்று சொல்லிக்கொள்ளும்படி வடநாட்டு அரசியலாரால் சொல்லப்பட்டுவரும் நிலை.

3. திராவிட மொழிக்கு இந்தி மொழியாலும், வடமொழியாலும் அழிப்பதற்கான பல முயற்சிகளை தடுத்துக் கொண்டேவரும் பெரும் வேலை.

தன் கடவுளை திராவிடன் தன் மொழியால் வணங்கமுடியாது.

தன் திருமணத்தை திராவிடன் தன் மொழியில் செய்துகொள்ள முடியாது.

தன் கடவுளை திராவிடன் தன்னைப் போன்ற ஓர் திராவிடன் உதவிகொண்டு வணங்க முடியாது.

தன் சொத்து, பிற உரிமைகளை திராவிடன் தன் திராவிட நீதிப்படி கையாள முடியாது.

திராவிடரில் பலர் சேர்ந்து உணவு கொள்ள, திராவிடன் சமைத்தால் முடியாது.

திராவிடன் மோக்ஷம்போக திராவிடனுக்கு தர்மம் செய்தால் முடியாது.

திராவிடன் திராவிடப் பெண்ணைக் காதலித்து மணம் செய்துகொள்ள முடியாது.

திராவிடன் படிப்பதற்கு திராவிட ஆசிரியர்கள் கிடைப்பதே கஷ்டம்.

திராவிடன் தன் முயற்சியால் இன உணர்ச்சி ஊட்டினால் தேசத்துரோகி ஆவான்.

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தால் திராவிடனின் கஷ்டங்கள் நீங்குமா? அதிகப்படுமா? தோழர் காமராஜ நாடாருக்கு எழுதித் தெரியுங்கள்.

## முகவரி மாற்றம்

திருவாளர் எஸ். ஆர். சுப்பண்ணா,
சுயமரியாதை ப்பிரசாரகர்,
1094 [illegible] சாப்ப மூலை,
[illegible] வீதி, தஞ்சாவூர்.

## பொள்ளாச்சியில் கோவை மாவட்ட திராவிடர் கழக 6-வது மாநாடு

கோவை மாவட்ட திராவிடர் கழக 6வது மாநாடு பொள்ளாச்சி நாராயண டாக்கீஸ் தியேட்டரில் 23-12-45 தோழர் க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) தலைமையில் நடைபெற்றது. கோவை, ஈரோடு, திருப்பூர், தாராபுரம், உடுமலை, மேட்டுப்பாளையம், உதகமண்டலம், பழனி முதலிய இடங்களிலிருந்து ஏராளமான இயக்கத் தோழர்கள் முதல் நாளே வந்து குழுமிவிட்டார்கள். 23-12-45 தேதி காலை பெரியார் அவர்களும் மற்ற தோழர்களும் புகைவண்டி நிலையத்தில், வண்டியை விட்டு இறங்கியதும், ஆயிரக்கணக்கான பொது மக்களால் உணர்ச்சி மிகும் வாழ்த்தொலிகளோடு வரவேற்கப்பட்டார்கள்.

கருப்புச்சட்டைத்தொண்டர்கள் அணிவகுப்புடன் தலைவர்கள் ஊர்வலம் முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று, தேர் முட்டி மைதானத்தில் தோழர் என். அர்ச்சுனன் அவர்களால் 'நாசக்கொடி' காது செவிடுபடும்படியான வாழ்த்தொலிகளுடன் ஏற்றிவைக்கப்பட்டது.

காலை 11½ மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. தோழர் என். அர்ச்சுனன் உணர்ச்சி மிகும் கொடி ஏற்றுவிழா சொற்பொழிவாற்றினார்.

பலத்த கைதட்டலுக்கிடையே பெரியார் அவர்கள் எழுந்து, திராவிடக் கழகத்தின் கொள்கை, காங்கரஸ் தோன்றிய வரலாறு, தன்மானம் தழைத்தோங்கத் திராவிட மக்கள் செய்யவேண்டிய வேலைகள் என்பதுபற்றி எழுச்சியோடு கூடிய பூரட்சிகரமாக சுமார் இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்து வைத்தார்.

வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் பி. கே. கிருஷ்ணசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் பி. என். இராமானுசம் முன்மொழிய, தோழர் கே. கோவிந்தன் பின்மொழிய தோழர் க. அன்பழகன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் மாநாடு இரண்டு மணிக்கு உணவு உண்ணக் கலைந்து மீண்டும் மூன்று மணிக்குக் கூடியது.

தலைவரின் முன்னுரைக்குப் பின் திராவிட நாட்டுப் பிரிவினை என்பதுபற்றித் தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) சொற்பொழிவாற்றினார். பின்னர், பெரியாரின் பெருந்தொண்டு என்பதுபற்றி, தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. சொற்பொழிவாற்றினார்.

நன்கச்சளை [illegible] அ[illegible]ஸ், கிருஷ்ணன் அவர்களை [illegible], இ[illegible] சவானர் எம். கே. டி. பா[illegible]ர் அவர்களையும் [illegible]ரு [illegible] சர்க்கார் [illegible] செய்ய வேண்டுமென்றும், திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தை ஆதரித்தும், உணவு விடுதிகளில் பேதம் பாராட்டும் கடைகளுக்கு சர்க்கார் லைசென்சு கொடுக்கக்கூடாதென்றும், தினசரி பத்திரிகையை ஆரம்பிக்கும்படி பெரியாரைக் கேட்டுக்கொண்டும், கருப்புச்சட்டைப்படையில் இளைஞர்கள் சேரவேண்டுமென்றும் மற்றும் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப்பின் மாநாட்டுச் செயலாளர் பி. என். இராமானுசம் நன்றி கூற மாநாடு இனிது கலைந்தது.

### பொதுக்கூட்டம்

மாலை 7 மணிக்கு மயிலஞ் சந்தைப் பேட்டையில் தோழர் என். அர்ச்சுனன் தலைமையில் 5000 பேர் கொண்ட மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையே 2½ மணி நேரம் சொற்பொழிவாற்றினார். செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இரவு 10½ மணிக்குக் கலைந்தது.

## நன்கொடை

செங்கற்பட்டு தாலுக்கா கேளம்பாக்கம் சமதியக்கத் தோழர்கள் வி. தி. பொன்னுசாமி-அங்கம்மாள் தம்பதிகள் பாரதிதாசன் நிதிக்காக ரூபாய் 25ம், தங்கள் குழந்தைக்கு 'தசக்கிரீவன்' என்ற பெயரிட்டமைக்காக, குடி அரசு, திராவிட நாடு பத்திரிகைகளுக்கு முறையே ரூ. 5ம் நன்கொடையாக அளித்துள்ளார்கள்.

கேளம்பாக்கம் சமதியக்கத் தோழர்கள் வி. தி. ஏழுமலை—ராதாபாய் தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைக்கு 'தக்கன்' என்ற பெயர் சூட்டப்பட்டதை முன்னிட்டு, குடி அரசு, திராவிடநாட்டுக்கு முறையே, ரூ. 3 நன்கொடை தரப்பட்டது.

## கருப்புச் சட்டைப்படை

23-12-45ல் மேல்புவனகிரி, சிதம்பரத்திலும், 25-12-45ல் குறிஞ்சிப்பாடியிலும், 26-12-45ல் விருத்தாசலம், விழுப்புரத்திலும் தோழர் ஆ. திராவிட மணி கருப்புச்சட்டை தொண்டர்படை அமைப்பு அலுவல்களைக் கவனித்தார்.

## காங்கரஸ் அங்கத்தினர்கள் திராவிடர் கழகத்தில் சேர்ந்தனர்

திண்ணியம் கிராமத்தில் காங்கரஸ் அங்கத்தினர்களாயிருந்த தோழர்கள் டி. எம். சிங்காரவேலு, டி. பி. தேவராசு, ஆர். கலியமூர்த்தி, சி. பழனிமாணிக்கம், பி. முத்துக்கருப்பாண்டார், ஆர். [illegible], கே. தர்மலிங்கம், [illegible] என். பொன்னுச்சாமி ஆகியோர் திராவிடர் கழகத்தில் சேர்ந்துவிட்டதாக தோழர் டி. எம். சிங்காரவேலு அறிவிக்கிறார்.

## அறிக்கை

தஞ்சை நகர திராவிடர் கழகத்தாரால் வெளியிடப்பட்ட பிட்நோட்டீஸ் ஒன்று எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். தஞ்சை நகரத்தில் திராவிடர் கழகத்திற்கு, பொதுக்கட்டிடம் ஒன்று வாங்கி அமைப்பதற்கு டி. எஸ். சந்தானம் அவர்கள் தலைவராகவும் உபதலைவர் பி. ஜெம்புலிங்கம் அவர்களும் காரியதரிசி எ. கே. ஆர். சாமியும், 9-மெம்பர் கொண்ட கமிட்டியும் நியமனம் செய்திருக்கிறார்கள். அதைப்பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். தஞ்சை தலைநகர், அதில் திராவிடர் கழக பொதுக்கட்டிடமிருக்க வேண்டியது அவசியம். கமிட்டியார் எடுத்துக்கொண்டமுயற்சியைப் பாராட்டுகிறேன். திராவிடத்தோழர்களும், பெரிய தனவந்தர்களும் ஷை கமிட்டி கட்டிட நிதிக்கு அன்புடன்பெருங்கொடையளித்து ஆதரவு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தோழர்களின் உதவியால் கூடிய சீக்கிரம் கட்டிடம் அமைத்து, மறைந்த "தளபதி சர் எ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் நினைவு மன்றம்" என்ற பெயரிடப்பட்டு பெரியார் ஈ. வெ. ரா., செல்வம் இவர்களின் படத்தைத் திறந்துவைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

ஷை கட்டிட நிதிக்கு என்னுடைய நன்கொடை ரூ. 50. கமிட்டியார் கேட்கும் சமயம் கொடுத்து விடுகிறேன்.

இங்ஙனம்,
கே. கே. நீலமேகம், குடந்தை

## நெல்லை மாவட்ட தோழர்களுக்கு!

ஐயா, வரும் ஜனவரிமாதம் கடைசி வாரத்தில் நமது தலைவர் பெரியார் அவர்களும், மாணவத்தோழர்களும் இயக்க பிரசாரவேலை நிமித்தம் நமது ஜில்லாவிற்கு வருவதால் அது விஷயமாக கூட்ட நடவடிக்கைகளுக்கு ஆங்காங்குள்ள திராவிட கழகத்தார் நெல்லை ஜில்லா திராவிட கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

குறிப்பு:- பொதுக்கூட்டங்களுக்கு தேதி குறிப்பிட வேண்டுகிறோம்.

தலைவர், கே. எம். பிரமநாயகம்.
ஜில்லா திராவிடர் கழகம்,
நெ. 8, நயினார்குளம்,
திருநெல்வேலி டவுன்.

## ஈரோட்டில் ஜின்னா பிறந்த நாள்

31-12-45 மாலை 6-மணிக்கு ஈரோடு ஜின்னா மைதானத்தில் தோழர் கான் சாகிப் கே. ஷேக்தாவூது அவர்கள் தலைமையில் நடந்த ஜின்னா பிறந்த நாள் கூட்டத்தில் தளபதி சி. என். அண்ணாதுரை, எம். ஏ. அவர்களும், [illegible] ரும் சொற்பொழிவாற்றினார்கள்.

## சென்னை சுயமரியாதைச் சங்கம்

### நிர்வாகக் கூட்ட விபரம்

சென்னை ஜில்லா சுயமரியாதைச் சங்க நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் 27-12-45 மாலை பொம்முசெட்டித் தெரு, 11-வது மாடியில் என். எம். சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது.

சென்னை ஜில்லா 6-வது சு. ம. மாநாடு—சிவாஜி நாடக வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டு, மாநாடு—நாடக இருப்பு நிதியை ஏற்கனவேயுள்ள நிதியுடன் சேர்த்து பாங்கியில் கட்டவேண்டுமென்றும், மொத்த நிதியிலிருந்து காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினருக்கு ஆயிரம் ரூபாயும், 450 ரூபாய் செலவில் தயாரித்த சிவாஜி நாடக உடைகளையும், நன்கொடையாக வழங்குவதென்றும் ஒரே மனதாக தீர்மானிக்கப்பட்டது.

சென்னையில் சங்கத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் அமைப்பது பற்றியும், ஒலிபெருக்கி வாங்கவேண்டுவது பற்றியும், இதற்காக மீண்டும் சென்னையில் இரண்டு நாட்கள் தொடர்ந்து சிவாஜி நாடகத்தை மிக விரைவில் நடத்திக்கொடுக்க வேண்டுமாய் காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினரைக் கேட்டுக்கொள்வதாகவும், அதற்கான ஏற்பாடுகளை உடனே ஆரம்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு இரவு 9-மணிக்குக்கூட்டம் முடிவுற்றது.

## திராவிடர் கழக 3-வது ஆண்டு விழா

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழக 3-வது ஆண்டுவிழா தோழர் எ. சித்தையன் அவர்கள் தலைமையில் 14-1-46ல் தேவாங்க பாடசாலையில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், சனார்த்தனம், சம்பத்து, தவமணிராசன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். வருக தோழரே!

மதிப்புரை

## தளபதிகளின் வீர உரைகள்!

ஷை புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். தளபதி சி. என். அண்ணாதுரை, கே. வி. அழகிரிசாமி, சனார்த்தனம் ஆகியோரது சொற்பொழிவுகளின் தொகுப்பை சிறந்த முறையில் யுத்த காலமாயிருந்தும் நல்ல தாளில் வெளியிட்டுள்ளார்கள் பொன்மலை திராவிட மாணவர் கழகத்தினர்! விலை நாலணா.

விற்பனை உரிமையாளர்,
செலக்ட் புக்ஸ்டால்,
142, கச்சேரி ரோடு, ஈரோடு.

## வரப்பெற்றோம்

சிங்கப்பூரில் தோழர் சாரங்கபாணி அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'தமிழ் முரசு' பத்திரிகையின் 1941ம் வருட ஆண்டு மலர் வரப்பெற்றோம். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் "தொழிலாளி" என்றகட்டுரையும், கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகளும் மலருக்கு சிறப்பையளிக்கின்றன. தமிழ் முரசு ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

திருச்சி "புறா மார்க் வைரங்கள்" ஜி. பாலகிருஷ்ணநாயுடு அண் கோ அவர்களால், அன்பின்காரணமாக அனுப்பப்பட்ட அழகிய காலண்டர் வரப்பெற்றோம்; நன்றியுரியதாகுக.

திருநெல்வேலி; தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அன்புடன் அனுப்பிய திருக்குறள் நாட்குறிப்பு வரப்பெற்றோம். யுத்தகாலமாயிருந்தும் அழகிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது போற்றத்தக்கது.

28-12-45 வெள்ளியன்று இரவு கவிஞர் பாரதிதாசன் அவர்களின் செல்வி தோழியர் கண்ணப்பர் சரசுவதி அவர்கட்கு ஆண் குழந்தை பிறந்துள்ள செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

## கோயம்புத்தூர் சாஸ்வத நிதி லிமிடெட்

நிதியில் மிமோராண்டம் 5-வது பாராவில் மூல திரவியத்தின் முதல் இடம். பங்கு ஒன்றுக்கு 50-ரூபாயாக 3000 முழுப் பங்குகளாகவும் என்பதற்குப்பதிலாக, பங்கு ஒன்றுக்கு 25-ரூபாயாக 609 பங்குகளும், பங்கு ஒன்றுக்கு 50-ரூபாயாக 2391 பங்குகளாகவும் என்று மாற்றவேணுமென்று பாங்கின் ஸ்பெஷல் மீட்டிங்கில் செய்த தீர்மானத்தை, மதராஸ் ஐகோர்டார் ஓ. பி. 243/14ல் 7-12-44, அங்கீகரித்ததின்பேரில் ஷை உத்தரவு 14-12-45ல் சென்னை ஜாயின்டு ஸ்டாக் ரிஜிஸ்டார் ஆபீசில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த, உத்தரவினால் மூல திரவியம் 394000 ரூபாய்க்குப் பதிலாக, 378775 ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கி [illegible] குறைந்த 609 பங்குகளுக்கு இப்போது பங்குதாரர்கள் [illegible]

## திருவத்திபுரம் திராவிடர்கழக மாநாட்டுத் தீர்மானங்கள்

திருவத்திபுரத்தில் 9-12-45ல் நடைபெற்ற வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

இம்மாநாடு பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை திராவிடர் கழகத்தின் (ஜஸ்டிஸ் கட்சி) நிரந்தரத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததை ஆதரிப்பதுடன் மாவட்டச் செயலாற்றும் கட்சித் தலைவர்களை (Regional Leaders) விரைவில் தேர்ந்தெடுக்குமாறு பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், பெரியார் அவர்களால் நீதிக்கட்சிக்கு முன் சமர்ப்பிக்கப்பட்டு நீதிக்கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அனைத்திலும் உறுதியான ஆதரவு காட்டுவதோடு சேலம், திருச்சி மாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதாகவும், காலஞ்சென்ற தோழர்கள் சி. டி. நாயகம், பழயகோட்டைப்பட்டக்காரர், செட்டிமலை சீனிவாசன், டி. டி. தம்புசாமி, சி. வி. எம். அண்ணாமலையின் மனைவியார், தேவசேனாபதி, போளூர் விஜயம் ஆகியோரது பிரிவுக்கு வருந்துவதாகவும், கறுப்புச் சட்டைப் படையில் இளைஞர்கள் சேருமாறு கேட்டுக்கொள்வதாகவும், கலைஞர்கள் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டி விடுதலை செய்யுமாறு சர்க்காரை கேட்டுக்கொள்வதாகவும், வடஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அரிசிப் பஞ்சத்தை நீக்க உடனடியாக ஆவன செய்யவேண்டுமாய் மாவட்ட கலெக்டர் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், நூல் சாயம் முதலியவற்றிற்கு உள்ள கட்டுப்பாடுகளில் உள்ள ஊழல்களை நீக்குமாறும், ரேஷன் முறையை நீக்கும்படியும் உள்நாட்டுத் துணிகளை ஏற்றுமதிசெய்ய வசதிசெய்ய வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும், தலைவர் பெரியார் அவர்களை நமது கட்சிக்கு ஒரு கொடியை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும், திருவத்திபுரம் பஞ்சாயத்து வாசகசாலையினர், சுயமரியாதைத் திராவிட இளைஞர் கழகத்தாரின் அன்பளிப்பான 75 குடி அரசு, பகுத்தறிவு புத்தகங்களை ஏற்காது காலங்கடத்துவதைக் கண்டித்து, உடன் மேலதிகாரிகள் கவனிக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும், தென்னிந்திய இந்திப் பிரசார மண்டலத்தின் செயலை வன்மையாகக் கண்டிப்பதோடு அத்தகைய இந்திப் பிரசார சபைகட்கு பொதுமக்கள் ஆதரவுகாட்டக் கூடாதெனக் கேட்டுக்கொள்வதாகவும், தேர்தலில் பாகிஸ்தான் பிரச்சினையின் பேரில் பெருந்தவெற்றிபெற்ற ஜனாப் ஜின்னா அவர்களைப் பாராட்டுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பு:- இம்மாநாட்டுக்கு முன் எஸ். ஐ. எல். எப். ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் 5-மாநாடுகள் ஷை மாவட்டத்தில் நடத்தியிருப்பதாலும் ஜஸ்டிஸ் கட்சியே திராவிடர் கழகமாக மாறியிருப்பதாலும் இம்மாநாட்டை வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ்கட்சி) 6-வது மாநாடு'' என்றே கொள்ளவேண்டுமென வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் சி. வே. சுப்பராயன் வேண்டுகிறார்.

## பொங்கற் புத்தாண்டு நாள்

★

திராவிடர் திருநாள் 'பொங்கல்' நாள் கொண்டாடுக! குனிந்து கிடக்கும் இனம் குருதி பரிமாறவும் தயாராகிக்கொள்ள வேண்டும், இந்த ஆண்டிலே!

திராவிடத்திலே புது முறுக்கு! புத்துணர்ச்சி! இவை இந்த ஆண்டின் விளைவாக இருக்கவேண்டும்.

ஆகவே தவறாது நாடெங்கும் கூட்டங்கள் கூட்டி, பொங்கல் கொண்டாடவேண்டிய முறையையும், ஆரியப் பண்டிகைகள் திராவிடர்க் கேற்றதல்ல என்ற உண்மையையும் விளக்கி சமுதாய எழுச்சி பொங்கியெழச் செய்யுங்கள். தைத்திங்கள் முதல் நாள் திராவிடர் திருநாள்!

வாழ்க திராவிடம்!

பொங்குக புதுமை!

## இயக்கத்தோழர்கட்கு வேண்டுகோள்

வேலூர் தோழர் சி. பி. சின்னராசு அவர்கள், சீர்திருத்த நாடகம் நடிக்கிறேன் என்ற பெயரால், பல ஊர்களுக்கும் போய் பல இயக்கத்தோழர்களிடம் பண விஷயத்தில் நாணயக் குறைவாகவும், மோசமாகவும் நடந்து கொண்டிருப்பதாக பொறுப்புள்ள இடங்களிலிருந்து தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. நமது இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் என்பவரின் நிலை, இம்மாதிரி நேர்ந்ததுபற்றி நாம் மிகவும் வருந்துவதுடன் அவர்கள் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்கும்படி நமது தோழர்களை வேண்டிக்கொள்கிறோம் என்று சென்ற வாரம் வெளியிட்டிருந்தோம்.

இந்த செய்தியை மறுத்து, தோழர் சின்னராசுக்கு சிபார்சாக 4, 5 பேர் கையொப்பமிட்ட கடிதம் வந்துள்ளது. அவர்களது விலாசம் தெரியாததால் அவர்களுக்கு நேரில் விஷயம் தெரிவிக்க முடியவில்லை. கடிதம் எழுதிய தோழர்கள் ராசிபுரம், அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, தென்னாற்காடு ஜில்லா முதலிய இடங்களில் சென்று விசாரித்தால் உண்மை தெரிந்து கொள்ளலாம். அல்லது நம்மையே வெளியிடும்படி தோழர் சின்னராசு விரும்பினாலும் வெளியிடப்படலாம்.

## குவிட் இண்டியா

''குவிட் இண்டியா'' என்று கோஷமிடும் காங்கரஸ் வீரர்கள் ''செய்யார் அரசியல் காங்கரஸ் மாநாட்டில்'' சுமார் 50 ரிசர்வ் போலீஸ், 30 சாதா போலீஸ் பந்தோபஸ்துடன் மாநாட்டை நடத்தினர்!


ஆம், உங்களுக்கு மகத்தான புதுவருட கொண்டாட்டங்கள்
இருந்தன என்பது நமக்குத் தெரியும். ஆனால்
கடல்கடந்த நாடுகளில் சேவை செய்யும்,
துருப்புகளின் நிலை என்ன?

★

மே. த. கவர்னரின்!

சைன்ய வசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
தாராளமாகப் பணம் கொடுத்துதவுதன் மூலம் அவர்களுக்கு
உண்மையான மகிழ்ச்சி தரக்கூடிய புத்தாண்டை உண்டாக்குவதற்கு
உங்களால்தான் முடியும்.

★

—எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள்,
கஷ்ட நிவாரண சகாயநிதி, C/O இம்பீரியல் பாங்க், இந்தியா
முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு
தயவுசெய்து உங்களது பணத்தை அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ளு ஜனவரிீ 5-உ

# திராவிடர் கழக நிதி

சென்றவாரம் தலையங்கத்தில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டத் தீர்மானங்கள் சிலவற்றைப்பற்றி விளக்கிவிட்டு மற்றவைகளைப்பற்றி இவ்வாரம் விளக்குவதாகக் குறிப்பிட்டிருந்தோம். அவைகளில் முக்கியமானது கழகத்திற்கு ஒரு லக்ஷம் அங்கத்தினர் சேர்ப்பதும், 5-வருட வேலைத் திட்டத்திற்கு ஆக 50000 ரூபாய் நிதி சேர்ப்பதுமாகும்.

கழகத்திற்கு அங்கத்தினர் சேர்ப்பதில் இதுவரை 35000 மெம்பர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இனி 65000-மெம்பர்கள் சேர்க்கப்படவேண்டும். முன் சேர்க்கப்பட்டிருக்கும் மெம்பர்களிடமிருந்து 1946ம் வருட சந்தா தொகை வசூலிக்கப்பட வேண்டியதுமாகும்.

இக்காரியங்கள் அந்தந்த ஜில்லாவில் உள்ள நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டு ஆங்காங்குள்ள ஜில்லா, தாலூகா கழகங்களை ஊக்கி வேலைசெய்தாலொழிய நடக்கக் கூடியவை அல்ல. ஒவ்வொரு திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினரும் 2000 அங்கத்தினர்களுக்காவது பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும், தங்கள் சொந்தப் பொறுப்பில் அந்தந்த ஜில்லாவில் மாதம் 5-நாட்களாவது சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒவ்வொருவரும் நபருக்குக்கொஞ்சமாக வேலைகளைப் பங்கிட்டுக்கொள்ளாவிட்டால் கண்டிப்பாய் ஒருவேலையும் நடக்காது என்பது உறுதி. இரண்டொருவருடைய சுற்றுப்பிரயாணம், ஒரு அளவு அவர்களது பேச்சு, ஆங்காங்கு நடந்த ஆண்டு விழா, பொதுக்கூட்டம், மாநாடு ஆகியவை பற்றிய நிகழ்ச்சிகளின் விளம்பரங்களால் இதுவரை நடந்துவந்த அளவுதான் இயக்கம் நடக்குமே தவிர அதாவது பிரச்சாரம், விளம்பரம், ஆகியவைதான் நடக்குமே தவிர தேர்தல்களில் போட்டி இடும்படியான ஒரு தக்க அஸ்திவாரமுள்ள ஸ்தாபனமாக ஆவது அரிது.

இன்று நமக்கு முழுநேரப் பிரமுகர்கள், தொண்டர்கள் என்பவர்கள் காங்கரசில் உள்ளது போல் இல்லை என்பது உண்மைதான். ஆனாலும் அதுபோல் முஸ்லிம் லீக்குக்கும் இல்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி இருக்க முஸ்லிம் லீக் அவர்கள் சமுதாயத்தில் நல்ல செல்வாக்கும், அஸ்திவாரமும், பொதுவில் மதிப்பும் பெற்றிருப்பதைக் காண்கின்றோம். அந்தப்படி நமக்கு ஏன் இல்லை என்றால் நம் சமுதாயப் பிரமுகர்களுக்கும், சவுகரியமுள்ள தொண்டர்களுக்கும் இயக்க நலன்பற்றிய கவலை இல்லை என்பதோடு அவரவர்களின் சுயநலத்திற்கே இயக்கக்காரர்களாகவும், இயக்கத்தின் பெயரை பயன் படுத்திக்கொள்ளுகிறவர்களாகவும், பெரும்பாலோர் இருக்கிறார்கள். அதில் பெரும்பாலோர் இயக்கத்தை ஈன விலைக்கு விற்று பயன் அடைபவர்களாகவும் இருக்கிறார்கள்.

அதனால்தான் முஸ்லிம் லீக் போன்று நமது இயக்கம் வேலை செய்ய, மதிக்கப்பட முடியவில்லை. என்றாலும் இப்போது நம் இயக்கத்தில் இருப்பவர்கள் சற்றேறக்குறைய யாவரும் சுயநல உணர்ச்சி இல்லாமல், இயக்க உணர்ச்சிக்காரர்களாகவே இருப்பதால், இனி அந்த மாதிரி குறை ஒன்றும் இல்லாமல் காரியம் நடைபெறலாம் என்கின்ற நம்பிக்கை இருப்பதாலேயே இவ்வளவு பெரிய திட்டங்களை துணிந்து வகுக்க இடமேற்பட்டுவிட்டது. ஆகையால் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் மெம்பர்கள் சேர்க்கும் விஷயத்தில் கவலை எடுத்து, அதை பூர்த்தி செய்யவேண்டும். 1946ல் லக்ஷம் மெம்பர்கள் சேர்க்கப்பட்டாக வேண்டும். இதற்குஆக மறுபடியும் ரசீது புத்தகங்கள் தயாராகின்றன. ஆங்காங்குள்ளவர்கள் புத்தகங்களுக்கு எழுதி வருவித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

நிதி வசூல் விஷயமும் முக்கியமானதேயாகும். நிதிக்கு 50000 வசூலிப்பது என்பது இன்றைய நிலையில் மிகவும் எளிதான காரியமாகும். இதுவரை, அதாவது இயக்கமானது பாமர மக்கள், பொது மக்கள் கைக்கு வந்தபிறகு இயக்கத்திற்கு நிதி என்பதாக, பொது மக்களிடமிருந்து எதுவும் வசூலிக்கப்படவில்லை — ஆகையால் இப்போது இயக்க நிதி என்பதாக வசூலிக்க முயற்சித்தால் வெற்றிபெறமுடியும் என்றே கருதுகிறோம். நிதி வசூலுக்கு பல தடை, எதிர்ப்பு, விஷமப் பிரசாரம் ஆகியவை நடைபெறலாம். அவற்றை நாம் சமாளித்துத்தான் ஆக வேண்டும். திலகர் நிதி பற்றி எவ்வளவோ குறைகள், மோசங்கள், கையாடல்கள், மற்றும் துஷ்பிரயோஜனம் செய்யப்பட்டவைகள் வண்டி வண்டியாய் எடுத்துச் சொல்லப்பட்டன. சில வெளியாக்கப்பட்டன. இவ்வளவு நடந்தும் இப்போதும் காங்கரசு நிதி கேட்பதுதான் தாமதம், கேட்டவுடன் தேவைக்குமேல் வசூலாகின்றன. இஷ்டமில்லாத மக்களும் பாத காணிக்கைபோல் செலுத்துகிறார்கள். தங்கள் பெயர்களை வெளியிடாமல் அள்ளிக் கொடுக்கிறார்கள். இதைப்பார்த்து வருகிறோம். ஆதலால் நமக்கு பணம் வசூலாகாவிட்டால், எதிரிகள் விஷமமும் எதிர்ப்பிரசாரமும் காரணம் என்று சொல்லமுடியாது. நம்மிடம் மக்களுக்கு மதிப்பு இல்லை, மரியாதை இல்லை, தாட்சண்ணியம் இல்லை என்றுதான் அர்த்தமாகும். ஆதலால் அதை இதுசமயம் நாம் பார்த்து விட்டுவிடவேண்டும்.

நமக்குப் பணம் கட்டுப்பாடான பிரசாரத்திற்கும், தினசரி பத்திரிகைக்கும், கறுப்புச்சட்டைப் படை பாதுகாப்புக்கும், கிளர்ச்சி துவக்குவதற்கும் இவை முதலியவைகளுக்கு தேவையாகிறது.

மேலால் வேலை ஒன்றும் செய்யாமல், இப்போது இருக்கிறபடியே இயக்கவேலைநடப்பதென்றால் நிதி தேவை இல்லை. அப்படிக்கு இல்லாமல் மற்ற இயக்கங்களைப் போல் மதிக்கப்படவும், பணியில் இறங்கவும், பிரசாரங்களை செயலில் காணவும் வேண்டுமானால், அரசியல் என்பதில் தலையிட வேண்டுமானால், தேர்தல்களில் தலையிடவேண்டுமானால், இயக்கத்திற்கு பத்திரிகை, தொண்

டர்கள், கட்டுப்பாட்டிற்கு அடங்கிய பிரசாரம், முழுநேரப் பிரமுகர்கள், தொண்டர்கள் நல்ல கட்டுப்பாடுகள், ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவைகள் இருந்தாகவேண்டும். அதற்கு கண்டிப்பாக நிதி இருந்தாகவேண்டும்—மற்றும் காரியங்களுக்கும் நிதி வேண்டும்.

நிதி திரட்டுவதில் நாம் முதல் தடவையாக இறங்குகிறோம். தனிப்பட்டவர்களிடம் பெருந்தொகை வசூல்செய்ய நமக்குத் தகுதி போதாது. அந்தப்படி வசூலாக்கக் கூடுமானாலும் அதற்கு நாம் அவரவர்களுக்கு பிரதிப்பிரயோஜனம் செய்தாக வேண்டும். அப்போது நமது கொள்கைகள் தடுமாறிவிடும். தனிநலம் கருதாமல் இயக்க வளர்ச்சிக்கு என்று பணம் கொடுக்கும் நபர்களோ, தாட்சண்யத்திற்கு கொடுக்கும் நபர்களோ, பயந்து கொண்டு கொடுக்கும் மக்களோ நமக்கு அவ்வளவு தாராளமாய் இல்லை. ஆதலால் நம் நிதி வசூல் பொதுமக்களிடம் இருந்து பெரிதும் தொண்டர்கள் மூலமாக, சிறு தொகையாக அதாவது ஒரு ரூபாய்நிதியாக, "ஒரு ரூபாய் அழகான இரசீது மூலம்" வசூலிக்கலாம். அதற்கென்றே தனிக் கமிட்டி நியமித்து முழுநேர நிர்வாகஸ்தர்கள் வைத்து நமது நித்திய வேலைகளுக்கு சம்மந்தமில்லாமல், தனி இலாகா ஏற்பாடுசெய்துவிட்டால் தக்கவர் தலைமையில் அனேகமாய்க் காரியம் நடைபெற்றுவிடும். நிதிவசூல் வேலையில் வெற்றிபெற்றோமானால் அதுவும் ஒரு ரூபாய் நிதி வசூலில் வெற்றிபெற்றோமானால் இயக்கத்திற்கு பெருமை அதிகப்பட்டுவிடும். பிறகு செய்யும் திட்டங்களுக்கும் சுலபத்தில் வெற்றி கிடைத்துவிடும்.

ஆகவே இப்போது திராவிடர் கழகத்திற்குஆக நிதி திரட்டுவது என்பது நமக்கு ஒரு சோதனையே ஆகும் என்று கருதியே இத்திட்டத்தை அமுல்நடத்திப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

எனவே அங்கத்தினர் எண்ணிக்கை பூர்த்திசெய்வதிலும், நிதியைப் பூர்த்தி செய்வதிலும் இயக்கத் தோழர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்மணிகள் யாவரும் ஒத்துழைத்து வெற்றியும் பெருமையும் தேடிக்கொடுக்க வேண்டுகிறோம்.

---

## திராவிடர் இயக்கமும் தினசரியும்

திராவிடர் இயக்கம் இன்று தமிழ்நாட்டில் மற்ற எந்த இயக்கத்திற்கும் தாழ்ந்ததாக இல்லாமல் மிகக உணர்ச்சியுடன் பொது மக்கள் கவனத்தைக் கவர்ந்து செல்வாக்குப்பெற்றிருக்கிறது.

இதற்குக் காரணம் இயக்கப் பிரச்சாரம் எவ்வித சுயநலமும் கலப்புஇல்லாமல் மக்கள் முன்னேற்றத்தைக் கருதியும், எவரும் ஆட்சேபிக்கவோ சந்தேகிக்கவோ முடியாத கொள்கைகளைக் கொண்டும், எவரின் ஒப்புதலும் இருந்து திரும்படியான திட்டங்களைக்கொண்டும் நடப்பதாலும், இயக்கத் தலைவர் பெரியார் தனது வாழ்நாளை உண்மையில் இயக்கத்திற்கு ஒப்புவித்து, தானே இயக்கமாக கருதிக்கொண்டு மற்றவர்கள் இஷ்டப்படி நடக்காமல் தன் திருப்திப்படி இயக்கத்தை நடத்தி வருவதினாலேயாகும். அதோடு கூட சுயநலத்துக்குஆக இயக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு இயக்கத்திற்குக் கெட்ட பெயரும், இயக்கத்தின் பரிசுத்தத்தன்மையில் மக்களுக்கு சந்தேகமோ, பேச்சுக்கிடமோ கொடுக்கும்படியானவர்களை அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் லட்சியம் செய்யாமலும், அவர்களுக்கு இயக்கத்தில் நல்ல இடமில்லாமலும் செய்து அடியோடு உதறித் தள்ளிவிட்டு, உள்ளதைக் கொண்டு கவலையோடு தொண்டாற்றுவதே யாகும்.

அதோடு மாத்திரமல்லாமல் இன்று இவ்வியக்கத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் "தொண்டாற்றுவதுதான் நம் கடமையே தவிர மற்றபடி நமக்கு வேறு கடமை இயக்கத்தில் இல்லை" என்று கருதும்படியான அளவுக்குத் தொண்டர்கள் ஏராளமாக இருப்பதும் அவர்களது நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெரியார் பெற்றிருப்பதுமாகும்."

இப்படிப்பட்ட இயக்கம் இன்று பெரியாரின் பேச்சின் பயனை மாத்திரமே அல்லாமல் அவரது எழுத்தின் பயனை சரியானபடி மக்கள் அடைவதற்கில்லாமல் குறைபடவேண்டி இருக்கிறது.

குடி அரசில் பெரியார் எழுத்து முன்போல் உணர்ச்சியும், எழுச்சியும் ஊட்டும்படியாகவும் புதிய விஷயங்களைக் காட்டும்படியாகவும் காணமுடிவதில்லை. பழைய செல்வாக்கைக்கொண்டு குடிஅரசு நடக்கிறதென்பதல்லாமல் அது புதிய சங்கதிகளுக்கும் புதிய கவர்ச்சிக்கும் பயன்படும் மாதிரியாக இருக்கவில்லை. இயக்க சேதிப்பத்திரிகையென்று சொல்லும்படியாகவே அது பெரிதும் இருக்கிறது. அது கருத்துப் பத்திரிகையாக முன்போல் நடந்து வருமானால் இன்றைய தமிழ்நாட்டின் நிலை வேறுமாதிரியாக இருந்திருக்குமென்பதோடு இனியும் அதிகமாக இளைஞர்களைக் கவர்ந்திருக்குமெனலாம்.

பெரியாருக்கு இப்போது சுற்றுப்பிரயாணம் அதிகமாகி விட்டது. ஏனெனில் பேச்சுக்கு ஆளில்லாமல் போனதே இதற்குக் காரணம். மக்கள் எந்தக் கூட்டத்திற்கும் ஒரு பிரதம பேச்சாளரையும், ஒன்று இரண்டு உப பேச்சாளரையும்தான் விரும்புகிறார்கள். பெரிதும் பிரதம பேச்சாளரைக் கருதியே கூட்டம் ஏற்பாடு செய்கிறார்கள். இல்லாவிட்டால் அது "விமரிசையான கூட்டமாய் இல்லாமல் சடங்குக் கூட்டமாகப்" பாவிக்கப்பட்டு விடுகிறது. ஆகவே திராவிடர் இயக்கத்

---

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

திற்கு இன்று பெரியாரைத்தவிர பிரதம பேச்சாளர் என்பவர்கள் கிட்டத்தட்ட அடியோடு கிடைப்பது இல்லை என்றே சொல்லலாம். இருப்பதாகச் சிலர் தங்களையே எண்ணிக்கொண்டிருப்பார்கள். பலர் வேறு சிலரையும் குறிப்பார்கள். அது சரியாகவும் இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்டவர்கள் எண்ணிக்கொண்டிருக்கவும், குறிப்பிடப்படவுந்தான் கூடியதாக இருக்கிறதே தவிர காரியத்தில் தேவைக்கு ஏற்றபடி பயன்படத்தக்கவர் மிக அரிதாக இருக்கிறது.

ஏனெனில் அழைப்புக்கு பதில் எழுதுவதில்லை, சிலர் அழைப்பை ஏற்றுக்கொள்வதில்லை. சிலர் ஏற்றுக்கொண்டு காரியம் நடத்த அனுமதி அளித்துவிட்டுப் போகாமல் ஏமாற்றம் அளித்து, மக்களின் வெறுப்புக்கு ஆளாகி விடுகிறார்கள். சிலர் அழைப்பை ஏற்றுக்காரியம் நடத்த, விளம்பரப்படுத்த அனுமதி கொடுத்துவிட்டுப் போகாமல் இருந்துவிடுகிறார்கள். சிலர் ஒப்புக்கொண்டு போகவரச் செலவுக்குப் பணமும் தாராளமாய்ப் பெற்றுக்கொண்டு கூட்டத்திற்குப் போகாமலே இருந்து விடுவதோடு மக்கள் ஏமாற்றமடையும்படியும் அழைத்தவர்களை அவமதித்தும் விடுகிறார்கள். சிலர் இதை அதிகமாய், மனதறிந்தே கையாளுகிறார்கள். இக்காரணங்களால் இயக்கத்திற்கு ஏற்படும் கெடுதியை மக்கள் அதிருப்தியை சமாளிக்க எதிர்பாராத நிலையில் திடீரென்று நேரில் வந்து அழைத்தவுடன் ஓடவும், சில இடங்களுக்கு வேறு யாரும் வரவில்லை, மக்கள் ஏமாற்றமடைவார்கள் என்று தெரிந்தவுடன் கூப்பிடாமலும் விழுந்து அடித்து ஓடவும் வேண்டிய அவசியத்திற்கும் அவசரத்திற்கும் பெரியார் ஆளாக வேண்டி இருக்கிறது. பிரதம பேச்சாளர் என்பவர்களின் சங்கதி இப்படியென்றால், உபபேச்சாளர்கள் சங்கதி இன்று இம்மாதிரி குற்றம் சொல்லுவதற்கு இல்லை என்றாலும், சிலர் தகுதிக்கு மேலால் தங்கள் சௌகரியத்தை எதிர்பார்ப்பதால், சிற்சில சமயங்களில் சலிப்படையவேண்டியவர்களாகி விடுகிறார்கள். சிலர் பிரதமப் பேச்சாளர்கள் என்பவர்களைப்போலவே தங்களையும் பாவிக்கவில்லையே என்று சங்கடப்பட்டு சலிப்படைந்து விடுகிறார்கள். சிலர் தாங்கள் அழைக்கப்பட்ட இடம் குதிரை வண்டியிலோ, கட்டை வண்டியிலோ செல்லவேண்டி இருந்தால், ஓடியும் மறைந்தும் கொள்கிறார்கள். எனினும் இவை இயற்கை என்னலாம். ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் சிறுவர்கள், உலக அனுபவமில்லாதவர்கள், ஆதலால் இது முன்னையதைப் போல அவ்வளவு மோசமானதல்ல என்றாலும் இவையெல்லாம் சேர்ந்து இயக்கம் தான் அடையவேண்டிய உண்மையான நியாயமான வளர்ச்சியும் மேன்மையும் அடையத் தடையாகி விடுகிறது. இதனாலும் பெரியார் தனது சுற்றுப்பிரயாணத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதனால் அடிக்கடி உடல்நிலை தொல்லை கொடுக்க நேரிடுகிறது. ஆகவே இந்தக் காரணங்களால் பெரியாருக்கு அவகாசமும், நடப்பு விஷயங்களைப் பற்றியதுமான எழுத்து வேலை, கொள்கைகள், திட்டங்கள் பற்றிய கட்டுரைகள், கருத்துக்கள், சம்பாஷணைகள் எழுத நேரமும் வசதியும் இல்லாமல் போய் விடுகிறது. வேறு பத்திரிகை நம் இயக்கத்திற்கென்றே இருக்கின்றது என்றாலும், அது புதிய கருத்துக்களையும் அரிய கருத்துக்களையும் கொள்ளத்தயங்குவதில்லை என்றாலும் பாமரமக்களை மனதிற்கொள்ளாமல் அறிஞர்களைக் கவர்ச்சி செய்யும் தன்மையில் விளங்குகிறது. அதுவும் வேண்டியதே என்றாலும், பாமர மக்களிடம் தான் நம் இயக்கத்திற்கு பெரிதும் வேலை இருப்பதால் அதை முக்கியமாகவும் அறிஞர்களை அடுத்தபடியும் நோக்கவேண்டி இருக்கிறது. இந்த நிலையில் விடுதலை தினசரியும் ஏற்பட்டு விட்டால் அதைக் கவனிக்க ஆட்கள் எங்கே என்ற பிரச்சினை எழுகிறது.

இயக்கத்திற்கு இன்று முழு நேரத்தோழர்கள் எத்தனை பெயர்கள் இருக்கிறார்கள் என்றால் ஒன்று, இரண்டு, மூன்று என்று கணக்கிடக்கூட மிக்க கஷ்டப்பட வேண்டி இருக்கும். இந்த எண்ணிக்கைக்கும் இவர்களுக்கு இயக்கம் சிறிதாவது ஆதரவு செய்ய வேண்டும், வழி காட்டுதல் செய்ய வேண்டும் என்கின்ற தேவை அடியோடு இல்லை என்று சொல்ல முடியாது.

ஆகவே கட்டுப்பாடாக உணர்ச்சியும் ஆர்வமும் உள்ள நல்ல இளைஞர்கள் இயக்கத்திற்கென்றே முழுநேரம் வேலை செய்ய வேண்டியவர்கள் வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இயக்கத்தில் ஏதாவது ஒருவழி செய்யவேண்டும், அவர்களும், இயக்கத்தில் உள்ள முழு நேரப் பிரமுகர்களும் மாதத்தில் 20-நாட்களுக்கு குறையாமல் சுற்றுப்பிரயாணம் செய்தாக வேண்டும். ஒழுங்குமுறைப்படி திட்டங்கள் போட்டுக்கொள்ளவேண்டும். கட்டுப்பாட்டுக்கு இணங்கி தொண்டாற்றுகிறவர்களும், நீதியாய் நடந்துகொள்ளுகிறவர்களும் இயக்கத்தால் ஆதரவு எதிர்பார்க்கலாம். இயக்கமும் அவர்களுக்கு தோழர் வேதாசலம் அவர்கள் தலைமையில் ஆதரவளிக்கும்.

இதை ஏன் எழுதுகிறோம் என்றால் 1946ம் வருடம் மிக்க குறிப்பிடத்தக்க ஆண்டு ஆகும். இதில் பெரியதொரு தொண்டை திராவிடம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

"1947ல் நம் இயக்கம் இருக்குமா அழிக்கப்பட்டுவிடுமா" என்று இரண்டிலொன்றைக் காணக் காத்திருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் இந்த ஒரு ஆண்டையாவது கட்டுப்பாடு, ஒழுங்கு, உண்மையான கவலை, உண்மைத்தொண்டு ஆகியவைகளோடு செயலாற்றிப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆசையாலேயே இதை எழுத வேண்டியது அவசியமாயிற்று.

இதுவரையிலும் கூட இயக்கம் பெரிதும் அப்படியேதான் நடந்து வந்திருக்கிறது என்றாலும் இவ்வாண்டு இவைகள் சிறிது அதிகமான தன்மையுடன் நடக்கவேண்டியிருக்கிறது. இந்தக்காரியத்திற்கு ஒரு தினசரி அவசியம். விடுதலை தினசரி நடத்த பல தோழர்கள் உண்மையில் ஆத்திரமாக இருக்கிறார்கள். அதற்கும் பல கவனிப்பு வேண்டி இருக்கிறது, பொருள் தேவை இருக்கிறது, ஆட்கள் தேவை

# பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

## இராமநாதபுரம் ஜில்லா

6–1–46 காரைக்குடி
7— திருப்பத்தூர் [இராமநாதபுரம்]
8— சிவகங்கை
9— சாத்தூர்
10— ஸ்ரீவில்லிப்புத்தூர்
11— மமுசாபுரம்
12— அருப்புக்கோட்டை

மேற்கண்ட சுற்றுப்பிரயாணத் திட்டத்தை அமைப்பாளர் ராம. சுப்பையா அவர்களும், நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ். எஸ். பழனிசாமி அவர்களும் தெரிவிக்கிறார்கள்.

## மதுரை ஜில்லா

13–1–46 காலை மதுரை சந்தைப் பேட்டை
14— பெரியகுளம்
15— நிலக்கோட்டை
16— சின்னாளபட்டி
17— வாடிப்பட்டி
18— மதுரை அமெரிக்கன் கல்லூரி
19— சோளவந்தான்
20— காலை, மதுரை "தாலமுத்து நடராசன் வாசகசாலை" திறப்பு விழா
,, மாலை, திண்டுக்கல்
21— முதல் ஜனவரி முடிய திருநெல்வேலி ஜில்லா

மேற்கண்ட சுற்றுப்பிரயாணத்தை நிர்வாகக்கமிட்டி உறுப்பினர் சுக்குனி அவர்களுக்காக தோழர் முத்திருளாண்டி தெரிவிக்கிறார்.

கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி உண்டு.

ஷை சுற்றுப்பிரயாணத்திற்காக, பெரியார் அவர்களும், மணியம்மையார், சனார்த்தனம் ஆகியோரும் ஈரோட்டை விட்டு இன்று இரவு புறப்படுகிறார்கள்.

## கறுப்புச் சட்டைத் துணி

கறுப்புச் சட்டை தைப்பதற்கு ஏற்ற துணி, பெரியார் ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி சுற்றுப்பிரயாண கூட்டங்களில் அடக்க விலைக்கு கிடைக்கும்.

---

இருக்கிறது ஆகிய இவைகள் எல்லாம் சரியாக, கண்டிப்பாக இருந்தால் ஒழிய இனி இயக்கத்தை நடத்துவது தக்க பலனளிப்பதாக இருக்க முடியாது. ஆதலால் பொறுப்பாளிகள் முன்வர வேண்டுகிறோம்.

# N. S. K., M. K. T.

## விடுதலை வேண்டுகோள் கமிட்டி

### ஷை கமிட்டியில் இருக்க இதுவரை சம்மதித்துள்ளவர் பெயர்கள்

ராவ்பகதூர் ஏ. வை. அருணாசலசாமி நாடார் தஞ்சை முனிசிபல் சேர்மன், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் டி. சண்முகம், சேலம் முனிசிபல் சேர்மன் பி. ரத்தினசாமி பிள்ளை, திருப்பத்தூர் முனிசிபல் சேர்மன் வி. எஸ். வீரபத்திரன், திருப்பூர் முனிசிபல் சேர்மன் கே. எஸ். பழனிசாமி கவுண்டர், ஈரோடு முனிசிபல் சேர்மன் ஆர். கே. வெங்கிடசாமி, தாராபுரம் முனிசிபல் சேர்மனும் கோவாபரேடிவ்பாங்க் பிரசிடெண்டுமான கே. முத்துகிருஷ்ண நாயுடு, கரூர் முனிசிபல் சேர்மன் எஸ். சின்னசாமி முதலியார், விழுப்புரம் முனிசிபல் சேர்மன் என். கோவிந்தராசலு நாயுடு, காரைக்குடி முனிசிபல் சேர்மன் சி. எம். நாராயணன் செட்டியார், பெரியார் ஈ. வெ. ராமசாமி, திருச்சி வழக்கறிஞர் டி. பி. வேதாசலம் பி. ஏ., திருச்சி முனிசிபல் கௌன்சிலர் என். சங்கரன், திருச்சி கே. ஏ. பி. விசுவநாதம், கரூர் கிராமப் பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்ட் பி. பழனியப்ப முதலியார், கோபி பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் பி. கே. முத்துவேலப்ப கவுண்டர், கோபி பஞ்சாயத்து போர்டு உபதலைவர் ஜி. ஏ. அங்கப்பன், திருவாரூர் முனிசிபல் கௌன்சிலர் எம். ஏ. சண்முகம், ராமநாதபுரம் ஜில்லாபோர்டு மெம்பர் எஸ். ஏ. முத்து நாடார்; திண்டிவனம் கோவாபரேடிவ் அர்பன் பாங்க் தலைவரும், பஞ்சாயத்து போர்டு மெம்பருமான டி. கே. கந்தசாமி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான நிர்வாக அதிகாரி ஆர். எஸ். நாயுடு பார்-அட்லா, கோபி செட்டிபாளையம் முஸ்லிம் லீக் தலைவர் எம். ஏ. காதர் எம். ஏ. (யு.எஸ்.ஏ.) சேலம் ஜில்லா விஸ்வகர்ம மகாஜன சபா செயலாளர் தோழர் எஸ். நாராயணசாமி, கோவை பிலிம் டைரக்டர் கே. எஸ். மணி, திருச்சி திராவிடர் கழக துணைத்தலைவர் ஏ. சின்னதுரை தம்டலக்காரர், மணக்கால் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் எம். கே. ராமசாமி, கள்ளிகுளம் திராவிடர் கழக தலைவர் எஸ். வி. டேவீஸ், கள்ளிகுளம் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் ஆர் எம். சவரிமுத்து நாடார், காரைக்குடி எம். எஸ். ராமய்யா செட்டியார், காரைக்குடி எம். எஸ். ஏ. எம். பழனியப்பசெட்டி [illegible] திருச்சி ராங்கர் வி. [illegible] [illegible]

# நடக்க இருப்பவை

● 10-1-46 வியாழன் விருத்தாசலம் தோழர் சி. முருகையாவின் பெரியார் இல்லத்தில் தென்னாற்காடு மாவட்ட கறுப்புச்சட்டைத் தொண்டர் படை மாநாடு நடத்துவதுபற்றி ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறும். மாவட்டத் தோழர்கள் வருக!

● 10-1-46 காலை சோழங்க நல்லூர் கிராமத்தில் திருச்சி ஜில்லா திராவிடர் கழக துணைத் தலைவர் பி. சின்னதுரை அவர்களின் சிறியதந்தையார் எம். நாகமுத்து அம்பலக்காரரின் முதல் ஆண்டு நினைவு நாள் நடைபெறும். ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும்.

## தோழர்கட்கு!

திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் கழகத்திற்காக நாட்கள் கொண்டாடவும், கழகத்திற்கு ஒரு கொடி ஏற்பாடு செய்யவும் வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டதிற்கிணங்க,சில தோழர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். மற்றும் இது விஷயத்தில் கவலையுள்ள தோழர்கள் இந்த ஜனவரி 30ந்தேதிக்குள் தங்களுக்குத் தோன்றுகிற, நாட்களையும், சின்னத்தையும் 'குடி அரசு' காரியாலயத்திற்குத் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஆ. திராவிடமணி.

## திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழக 3-வது மாநாடு

திருநெல்வேலியில் ஜனவரி 26, 27 தேதிகளில் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மாநாட்டுத் திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

திராவிடநாட்டுப் படத்திறப்பாளர்: தளபதி சி. என். அண்ணாதுரை எம்.ஏ., அவர்கள்.

மற்றும் பல தோழர்கள் கலந்துகொள்வார்கள்.

சே. எம். பிரமநாயகம்,
வரவேற்புக்கழகத் தலைவர்.

எஸ். எஸ். அர்ச்சுனன், சங்கரபாண்டியன், காரியதரிசிகள்.

ஷேக் முகம்மது, விளம்பர அதிகாரி.

---

தம்புசாமி. திண்டுக்கல் சி. எம். பி. மாணிக்கம், அறந்தாங்கோட்டை ராஜா மோட்டார் சர்வீஸ் எம். எம். சிவசாமி நாடார், திரு. சிட்டி அமைச்சர் பலாளர் டி. என். [illegible] திரு [illegible]

# கருணை காட்டுக!

(கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் தமிழ்மணிகள், நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராஜ பாகவதர் இருவரையும் கருணை காட்டிவிடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டங்களில்)

0 0

வேலூர் ஜில்லா போர்டு: 22-12-45ல் தோழர் பக்தவத்சலம் நாயுடு அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் கிருஷ்ணன்-பாகவதருக்கு கருணை காட்டுக என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. டை தீர்மானம் தோழர் வி. எஸ். விசுவநாத முதலியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டது.

0 0

சேலம் முனிசிபல் கௌன்சில்: 24-12-45ல் தோழர் பி. ரத்தினசாமி அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

0 0

தூத்துக்குடி முனிசிபல் கௌன்சில்: 28-12-45ந் தேதி கூட்டத்தில் பி. வி. பொன்னுசாமி நாடார் அவர்களால் டை தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

0 0

புதுப்பாளையம் பஞ்சாயத்துபோர்டு: 30-11-45 கூட்டத்தில் தோழர் அண்ணாமலை ஆச்சாரி அவர்களால் டை தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

0 0

சிவகெங்கை பஞ்சாயத்துபோர்டு: 18-12-45ல் தோழர் எஸ். ஆர். எம். வெங்கடாசலம் சேர்வை தலைமையில் நடந்த கூட்டத்தில் டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

0 0

மண்ணச்சநல்லூர் பஞ்சாயத்து போர்டு: 24-12-45ல் தோழர் எ. கே. அய்யஞ்செட்டியார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் எஸ். பி. சாம்பசிவம் பிரேரேபிக்க டை தீர்மானம் நிறைவேறியது.

0 0

பழையபேட்டை விஸ்வபிராமண மகாஜன வாலிபர் சங்க 14-12-45ந் தேதி நாராயணசாமி ஆசாரியார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

0 0

பெண்ணாடம் சிவகுருநாதன் கழகத்தின் சார்பில் அண்ணாமலை நகர் மாணவர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் 30-12-45ல் நடந்த கூட்டம்.

0

மாயவரம் தாலுக்கா கூறைநாடு விஸ்வகர்ம இளைஞர் சங்க ஆதரவில் 28-12-45ல் மாயவரம் முனிசிபல் சேர்மன் சி. கனகசபை செட்டியார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

திருவண்ணாமலையில் 30-11-45ல் தோழர் எ. நாராயணசாமி முதலியார் பி. எ. பி. எல்., அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்

0 0

சப்போ மருத்துவர் சார்பில் 9-12-45 தேதி தோழர் அங்கமுத்து தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

0 0

தூத்துக்குடி விஸ்வகுல இளைஞர் சங்க சார்பில் 18-12-45ல் தோழர் ஆ. சுப்பையா தலைமையில் நடந்தகூட்டம்.

0 0

தஞ்சாவூர் விஸ்வகர்ம மகாஜன சார்பில் 30-11-45ல் தோழர் சேதுராமன் தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

திருவண்ணாமலை திராவிடர் கழக 21-12-45ந் தேதி நிர்வாகக் கமிட்டி கூட்டம்.

0 0

மாயவரம் தமிழ் சித்தவைத்யமாதர் சங்க சார்பில் 19-12-45ல் ஆ. ராமாமிர்தத்தம்மாள் தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

கோனவந்தான் விஸ்வகுல சமரச சுத்த சன்மார்க்க சங்க ஆதரவில் 26-12-45 தோழர் எஸ். ஆர். குப்புசாமி தலைமையில் நடந்த கூட்டம்.

0 0

வத்தலகுண்டு, 27-12-45 தோழர் கே. கே. சாமி தலைமையில் நடந்த பொதுக் கூட்டம்.

0 0

பழனி திராவிடர் கழக சார்பில் தோழர் கே. நாராயணசாமி தலைமையில் 26-12-45ல் நடந்த கூட்டம்.

0 0

சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஜஸ்டிஸ் திராவிடர் கழகம் சார்பில் 13-12-45ல் நடந்த பொதுக்கூட்டம்.

0 0

விழுப்புரம் விஸ்வ பிராமண சங்க சார்பில் 11-12-45ல் முனிசிபல் சேர்மென் தோழர் எம். கோவிந்தராசலு அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டம்.

0 0

கடலூர் வண்டிப்பாளையம் 28-12-45ல் தோழர் என். பி. அரசன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

0 0

காஞ்சிபுரம் திராவிடர் கழக சார்பில் 23-12-45ல் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடந்த பொதுக் கூட்டம்.

0 0

முசிறி தாலூகா தண்டையார் பேட்டை, தென்னாற்காடு, பண்ருட்டி, மீன்சுருட்டி முதலிய ஊர்களிலிருந்தும் கவர்னருக்கு மஜூகளும் தந்திகளும் அனுப்பப்பட்டுள்ளன கருணை கேட்டு!

0 0

திருவத்திபுரம் (வ. ஆ) சுயமரியாதை திராவிட இளைஞர் கழகத்தார் கவர்னருக்குத் தந்தியனுப்பியுள்ளார்கள், கருணை கோரி!

## அறிவிப்பு

ஏஜண்டுகள் பில்படி கொடுக்க வேண்டிய பாக்கிய 10ந் தேதிக்குள் அனுப்பிக் கொடுக்காவிடில் எவ்வித அறிவிப்புமின்றி தங்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகை நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஏஜண்டுகளுக்கு அறிவிப்பு

ஏஜண்டுகளுக்கு அனுப்பியதில் ஜஸ்டிசைட் பில்களில் கமிஷன் கழிக்காமல் அனுப்பிவிட்டோம். அப்படிப்பட்ட ஏஜண்டுகள் கமிஷனை கழித்துக் கொண்டு பாக்கித் தொகையை அனுப்பிக் கொடுக்க வேண்டுகிறோம்.

மானேஜர்.

## மறைவு

பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தலைவரும் மாகாண திராவிடர் கழக கமிட்டி உறுப்பினருமான தோழர் பராங்குசம் அவர்களின் ஆண் குழந்தை பிறந்த பதினாறாம் நாள் 18-12-45 அன்று இயற்கை யெய்தியமைக்கு வருந்துகிறோம்.

## பிறப்பு

நன்னிமங்கலம் திராவிடர் கழக சார்பில் சீர்திருத்த திருமணம் செய்து கொண்ட மொட்டையாண்டி—ஆரியமாலா தம்பதிகளுக்கு 10-12-45ல் பெண் குழந்தை பிறந்து 'தமிழ் மணி' எனப்பெயரிடப்பட்டதின் நினைவாக குடி அரசுக்கு 1ரூபாய் அளிக்கப்பட்டது.

---

சென்னை மாவட்ட 6-வது சுயமரியாதை மாநாட்டிற்கும், சிவாஜி நாடகத்திற்கும் எல்லா வகையிலும் ஒத்துழைத்த தோழர்களுக்கு மாநாட்டு வரவேற்புக் கழகத்தாரும், நாடகக் கமிட்டியாரும் நன்றி செலுத்துவதோடு, நாடக டிக்கட்டுக்கு, வெளியூர் தோழர்கட்கு சிரமம் ஏற்பட்டதற்கு வருந்துவதாகவும் தெரிவிக்கிறார்கள்.

---

16-11-45 மாலை 4மணிக்கு கோவை மருத்துவர் சங்க சார்பில் ஒக்கிலியர் வீதியிலுள்ள "சுந்தரா நிலையத்தில்" ஓர் ஜில்லா சங்க அமைப்புக் கூட்டம் தோழர் கி. என். பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

றாக வெளிப்படுத்திக் காட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில் நம்மக்கள் இக்கதைகளை, ஒரு தந்திரக்கதை என்று கொள்ளாமல் ஒரு தெய்வீகக்கதை என்று எண்ணுவதைப் போக்கவே ஒழிய வேறில்லை. இதற்குஆக நாம் கதையை மாற்ற வேண்டும் என்கின்ற அவசியம் கூட இல்லை. வால்மீகியார் எழுதி உள்ளபடி நடித்தால் போதும். அவர் (அதாவது வால்மீகியார்) இராமாயணத்தில் இராமனையும் சீதையையும் மிகமிக சாதாரண கீழ்த்தர மக்களாகத்தான் காட்டி இருக்கிறாரே ஒழிய, உயர்தரமாக எங்கும் நடவடிக்கைகள் வைத்துக் காட்டவில்லை.

### வால்மீகி கதைப்படி

வால்மீகி இராமாயணக் கதைப்படி இராமனது பட்டாபிஷேகம் நன்றாய் விளக்கப்படுகிறது.

### ராமன் சூட்சி

1. அதாவது அயோத்தியை தசரதன், தான் கைகேயியை திருமணம் செய்த காலத்திலேயே கைகேயிக்கு கொடுத்துவிட்டான். அந்த நிபந்தனைமீதுதான் கேகயராஜன் தனது மகளை தசரதனுக்கு கொடுத்திருக்கிறான்.

இதை வால்மீகி இராமாயணக் கதையில் இராமன் வாயினாலேயே சொல்ல வைத்திருக்கிறார்.

இந்தவிஷயத்தை இராமன்தெரிந்திருந்தே, பரதன் இல்லாதபோது அவனுக்கும் அவன் தாய் கைகேயிக்கும் தெரியாமல் பட்டாபிஷேகம் செய்துகொள்ள சம்மதித்து தகப்பன் சூழ்ச்சிக்கு இணங்குகிறான்.

### தசரதன் சூட்சி

தசரதன் சூழ்ச்சி செய்கிறான் என்பதையும் வால்மீகி தசரதன் வாயினாலேயே சொல்ல வைக்கிறார். அதாவது:

இராமனைக் கூப்பிட்டு தசரதன் முடிசூட்டுவிழாவைப்பற்றிச் சொல்லும்போது "பரதன் இங்கு இல்லாதிருக்கும் சமயமே முடிசூட்டுக்கு ஏற்றநாள்" என்றும் "அவன் வருவதற்குள் முடிசூட்டு நடக்கும்வரை ஜாக்கிரதையாக இரு" என்றும் தசரதன் சொன்னதாக சித்தரித்திருக்கிறார்.

### சீதை இழிதன்மை

இது போலவே சீதையைப்பற்றியும் வால்மீகி, சீதை வாயினாலேயே அவளை கீழ்த்தரப் பெண்ணாக சித்தரித்திருக்கிறார்.

இராமன் காட்டுக்குப் போகும்போது அவன் சீதையை "அயோத்தியிலேயே இரு" என்று சொன்னபோது சீதை "என்னை பரதனுக்கு கூட்டிக்கொடுத்து அதனால் நாடு அடையப் பார்க்கிறாயா" என்றும், லட்சுமணன் வனத்தில் சீதைக்கு காவலாக இருக்கும்போது மானின்பின் சென்ற இராமன் உடனே திரும்பிவராதது கண்டு லட்சுமணனை இராமனுக்கு உதவியாகச் செல்லும்படி சீதை சொன்னதை இலட்சுமணன் கேட்காமல், சீதைக்கு "காவல் இருக்கவேண்டியது முக்கியம்" என்று சொன்னவுடன், சீதை லட்சுமணனை "நீ என்னைக் கைப்பற்றவும் என்னை அனுபவிக்கவும் இப்படிப் பேசுகிறாய் அயோக்கியனே" என்றும், மற்றும்பல இழிமொழி சொன்னதாக சீதை வாயாலேயே சித்தரிக்கிறார்.

### விபீஷணன் தன்மை

விபீஷணனை இராமன் சேர்த்துக்கொள்ளும்போது "விபீஷணன் அயோக்கியன் சகோதரத்துரோகி ஆதலால் அவனைச் சேர்க்கக் கூடாது" என்று பக்கத்தில் இருந்த லட்சுமணன் முதலிய நண்பர்கள் சொன்ன போது "அப்படிப்பட்ட அயோக்கியன்தான் இப்போது நமக்குவேண்டும்", பரதனைப் போன்றவர்களால் நம் காரியம் ஈடேறாது என்பதுஆகச் சொல்லுவதாக இராமன் வாயாலேயே சொல்லச் செய்கிறதுடன், இவனால் நமக்கு கெடுதிசெய்ய முடியாது என்று சொன்ன மாதிரியில் சித்தரிக்கிறார்.

மற்றும் பல ஒழுக்க ஈனம், நாணய ஈனம் ஆன காரியங்கள் ஏராளமாக இராமாயணக் கதையில் வரும் நல்ல பாத்திரங்கள் என்பவர்கள் மீது காணக்கிடைக்கிறது. ஆதலால்தான் வால்மீகி இராமாயணப்படி நாடகம் நடித்தாலே, இராமாயணத்தின் தெய்வீகத் தன்மை, மதத்தன்மை ஆகியவைகள் ஒழிந்து போகும் என்று சொல்லுகிறேன்" என்பதாகக்கூறி நாட்டில் நடைபெறும் கேடுகளை விளக்க

## பகுத்தறிவு

(கஜேந்திரன்)

திராவிட நாட்டைப் பொறுத்த அளவில் சுயமரியாதை இயக்கம் சொல்லும் விஷயங்களைப் பள்ளிகளில் படித்துவிட முடியாது. பெரிய கலாசாலை பட்டம் பெற்று விடுவதினாலும் பகுத்தறிவு வந்துவிடாது. இந்நாட்டுக் கல்விவேறு, பகுத்தறிவு வேறு.

பெரிய வைத்திய நிபுணனாய் இருப்பான்; ஆனால் அவனோ பசுவின் மூத்திரமும், சாணியும் சாப்பிட்டால் ஒருவன் மோட்சத்திற்குப் போகலாம் என்று கருதுவான்; பெரிய வானசாஸ்திர நிபுணனாய் இருப்பான்; ஆனால் அவனோ புரோகித ஆரியன் மூலம் மாண்டதன் தந்தைக்கு அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு முதலியவற்றை அனுப்புவான். பெரிய உடற்கூறு சாஸ்திர நிபுணனாய் இருப்பான்; ஆனால் அவனோ தன் வீட்டுப் பெண்களை வீட்டிற்குத் 'தூர'மென்று திண்ணை அறையில் மூடி வைத்துவிட்டுத் தான்மட்டும் வீட்டிற்குள் உறங்குவான். ஆகவே திராவிடனுக்கு பகுத்தறிவு பெற பள்ளிக்கூடக்கல்வி போதுமானதாகிவிடாது.

திராவிடன் பகுத்தறிவுபெற சுயமரியாதை இயக்கம் போதிக்கும் கல்வி,அறிவு அவசியமாகிறது.

சுயமரியாதை இயக்கம் இந்நாட்டு மக்களுக்கு முதலில் மான உணர்ச்சி ஏற்படவும், எல்லாமக்களையும் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் சமப்படுத்தி ஒன்று சேர்க்கவும் ஏற்பட்டதாகும். திராவிடநாட்டு மக்களுக்கு மானவுணர்ச்சி இல்லாமற் போனதற்கும், அவர்களுக்குள் ஒற்றுமையும், சமத்துவமும் இல்லாமற் போனதற்கும் காரணம் பகுத்தறிவு பயன் படுத்தப்படாமைதான் என்று சுயமரியாதை இயக்கம் சாற்றுகிறது.

## நன்றி

திருச்சி டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத்திற்கு, இதுகாறும் நன்கொடையுதவிய அன்பர்களுக்கு மனமுவந்த புத்தாண்டு வாழ்த்து கூறுவதுடன், தொடர்ந்து உற்சாகமூட்டுமாறும், கோவை தோழர் கே. சுந்தரம் அவர்கள் ஷை இல்லத்திற்கு ரூபாய் 200 நன்கொடையளித்தமைக்கு நன்றி பாராட்டுவதாகவும், செயலாளர் தோழர் வி. வீராசாமி பி. ஏ. அவர்கள் அறிவிக்கிறார்.

---

நாடக, சினிமா துறையில் செய்ய வேண்டிய திருத்தங்களைப்பற்றியும் அவைகளைச் செய்யக் கறுப்புச்சட்டைப் படை வேலை செய்யும் என்றும், பேசினார்.

# திராவிடர் கழகங்கள்

அத்துக்குடி திராவிடர் கழக சார்பில் 27-11-45ல் தோழர் எம். எஸ். மணி தலைமையில் தோழர்களான, வீரசிகாமணி, தங்கவேல், நடராசன் ஆகியோர் பேசினர்.

*   *

பட்டுக்கோட்டை திராவிடர்கழக சார்பில் 29-11-45 மாலை தோழர் பி.வேணுகோபால் பி. ஏ. பி. எல்., தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் டி. பி. வேதாசலம் பி. ஏ., முகம்மது மீராசா, கே. எஸ். சிவராமன் சுாதா, முதலியோர் "தேர்தலும் திராவிடர் கடமையும்" என்பதுபற்றிப் பேசினர்.

*   *

வேப்பங்குளம் திராவிட வாலிபர் கழக சார்பில் 7-12-45ல் கொழும்பு தோழர் எம். வி. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பி. ஏ. சிதம்பரம், வி. மழையப்பன் ஆகியோர் பேசினர்.

*   *

விருத்தாசலம் திராவிட மாணவர் கழக சார்பில் 9-12-45 மாலை தோழர் முனுசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் தோழர் நாராயணசாமி தலைமையில் தோழர் முருகேசன் பேசினார். பழனிக்கண்ணு நன்றி கூறினார்.

*   *

சின்ன சேலம் திராவிடர் கழக சார்பில் 8-12-45 மாலை தோழர் தாண்டவமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் கே. நாராயணசாமியைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஒன்று நிறுவப்பட்டு தோழர்கள் பூவராகன், எத்திராசன் ஆகியோர் பேசினர்.

*   *

பொன்மலை திராவிடவாலிபர் கழக கூட்டம் 30-11-45ல் தோழர் பரமசிவம் தலைமையில் நடைபெற்று தோழர்கள் கோவிந்தசாமி அப்பாசாமி, பராங்குசம், பெருமாள், சௌரிராசன், சோலாதன் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

*   *

பொன்மலையில் 4-12-45ல் திராவிட வாலிபர் கழக பொதுக்கூட்டம் தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்று தோழர்கள் தீனதயாளு, மாணிக்க வாசகம், புலவர் குழந்தையா, டி. கே. சீனிவாசன், ச. சின்னையன் ஆகியோர் பேசினார்கள்.

*   *

புலிவலம் திராவிடர் கழக சார்பில் 27-11-45 மாலை தோழர் தாஜுதீன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் என். பி. காளியப்பன் கொடியேற்றினார். பின் தோழர்கள் எஸ். கே. சாமி, முகம்மது மொய்தீன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

*   *

திண்டிவனம் திராவிட இளைஞர் கழக சார்பில் 2-12-45ல் தோழர் வெங்கடேசன் தலைமையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்று தோழர்கள் அஞ்சுகன், இளம்வழுதி, காஞ்சி கல்யாணசுந்திரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் என். எஸ். கே., எம். கே. டி. விடுதலைத் தீர்மானமும் நிறைவேறியது. புருடோத்தமன் நன்றி கூறினார்.

*   *

கோலார் தங்கவயலில் 3-12-45ல் உரிகம் தோழர் டி. கே. பெருமாள் தலைமையில் திராவிட வாலிபர் கழகம் துவக்கப்பட்டு தோழர் சனார்த்தனம் எம். ஏ. சொற்பொழிவாற்றியதோடு தோழர் கே. ஜி. துரைராசனால் "நான் கண்ட முருகன்" என்ற சீர்திருத்த காலட்சேபம் நடைபெற்றது. கே. ஜி. துரைராசனுக்கு தன்மான முரசு என்று பட்டமளிக்கப்பட்டது.

*   *

நீடாமங்கலம் திராவிட மாணவர் கழக சார்பில் 9-12-45 மாலை தோழர் எஸ். சரவணன் பி. ஏ. தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் வி. சின்னத்தம்பி, எஸ். கே. சாமி, கே. ஆர். ஜி. பால் ஆகியோர் விரிவுரையாற்றினார்கள்.

*   *

திண்ணியம் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் சிங்காரவேல் தலைமையில் 2-12-45ல் நடைபெற்று தோழர்கள் எம். சிங்காரவேலு, பி. தேவராசு, பி. ஜெகதீசன், ஆர். கலியமூர்த்தி, ஆர். ராசகோபால் ஆகியோர் முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

*   *

சீர்காழியில் 6-12-45ல் தோழர் என். இராமசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் வேலன், மாணிக்கம், சந்திரன், வெற்றிமணி ஆகியோர் பேசியபின் திராவிட மாணவர் கழகம் ஒன்று அமைக்கத்தீர்மானிக்கப்பட்டது.

*   *

மதுரை அழகாடி திராவிடர் கழக கிளைக்கு தோழர்கள் அழகுசுந்தரம், கே. முத்துசாமி, அ. பழனி, எஸ். முத்து, எஸ். ராமசாமி ஆகியோர் தலைவர், உப தலைவர், பொருளாளர், செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வினைக் குழுவும் அமைக்கப்பட்டது.

*   *

தஞ்சை நகர திராவிடர் கழக சார்பில் 17-12-45ல் தோழர் எஸ். கோவிந்தசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் டி. எஸ். சந்தானம், பி. ஜம்புலிங்கம், எஸ். கோவிந்தசாமி ஆகியோர் தலைவர், உபதலைவர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டிட நிதி வசூல் கமிட்டி நிறுவப்பட்டது.

*   *

அய்யம்பேட்டை திராவிடர் கழக சார்பில் 9-12-45ல் தோழர் எஸ். செந்திருவேல் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்று தோழர்கள் துரை, சுந்தரேசன், புலவர் ஆறுமுகம், டி. கே. சீனிவாசன் முதலியோர் பேசினார்கள். என். எஸ். கே., எம். கே. டி.க்கு கருணைகாட்டுக என்ற தீர்மானத்தை வெற்பரசன் ஆமோதித்துப் பேசினார்.

*   *

ஆலத்தம்பாடியில் 16-12-45 அன்று திராவிடர் கழகமும் செல்வம் வாசக சாலையும் திறக்கப்பட்டு தோழர்கள் வி. சுந்திரேசன் பி. சுப்ரமணியன். வி. சீனுவாசன் ஆகியோர் முறையே தலைவர், காரியதரிசி, பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வினைக்குழுவும் அமைக்கப்பட்டது.

*   *

இராசிபுரம் வட்டம், சேடர்பாளையத்தில் திராவிடர் கழக கட்டிடம் கட்டுவதற்கு நிதி திரட்ட "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" நாடகம்விரைவில் நடைபெறுமென திராவிடர் கழக செயலாளர்கள் அறிவிக்கிறார்கள்.

*   *

திருத்துறைப்பூண்டி தாலூகா தோலி கிராமத்தில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டு தோழர்கள் எஸ். கல்யாணம், சிங்காரவேலு, எஸ். சிவானந்தம், எ. ராமலிங்கம், ஆர். சுப்பிரமணியன், வி. ராமலிங்கம், நெடுஞ்செழியன், சண்முகம், எஸ். ராமலிங்கம் ஆகியோர் முறையே தலைவர், துணைத்தலைவர். செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர் என்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

*   *

செங்கம் திராவிடர் கழக சார்பில் 17-12-45ல் பெரியார் பிறந்தநாள் விழா தோழர் வி. எஸ். வேலு தலைமையில் நடைபெற்று தோழர் ஜி. முத்துசாமி பேசினார். தோழர் எஸ். இராசா இயக்கப்பாட்டுகள் பாடினார்.

*   *

நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழக சார்பில் 15-12-45ல் தோழர் என். எம். நாகராசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் என். ஆர். சத்தியநாதன், ராசகோபால் பூவலிங்கம், சுப்ரமணியம் ஆகியோர் பேசினார்கள்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42; Cutchery street; ERODE.

ரோஜா முத்தையா